செ.வெ.எண்.02 நாள்.02.10.2017.

திருநெல்வேலி பாளையங்கோட்டை வ.உ.சி.மைதானத்தில் காந்தி ஜெயந்தி விழா, தூய்மை பாரத நான்காம் ஆண்டு துவக்க விழா மற்றும் ''தூய்மையே சேவையின்'' நிகழ்ச்சியின் நிறைவு விழா நிகழ்வு மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

--------

திருநெல்வேலி பாளையங்கோட்டை வ.உ.சி.மைதானத்தில் காந்தி ஜெயந்தி விழா, தூய்மை பாரத நான்காம் ஆண்டு துவக்க விழா மற்றும் ''தூய்மையே சேவையின்'' நிகழ்ச்சியின் நிறைவு விழா இன்று (02.10.2017) நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் தாமிரபரணி ஆற்றினை சுத்தம் செய்த பணியில் கலந்து கொண்ட கல்லூரிகள், பள்ளிகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், செஞ்சிலுவைச் சங்கங்கள், ஓழ்வூதியோர் சங்கங்கள், புகைப்படக்காரர்கள் சங்கம் ஆகியோரை பாராட்டி, பரிசு மற்றும் கேடயங்களை வழங்கினார். மேலும், தூய்மை சேவை வாரத்தினையொட்டி, நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும், விழிப்புணர்வு குறும்பட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப் பரிசுகளையும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் வழங்கினார்.

பின்னர், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் பேசியதாவது :–

சுதந்திர இந்தியாவின் தேசத்தந்தை, தேசப்பிதா, மகாத்மா என்று அழைக்கப்பட்ட நமது அண்ணல் காந்தியடிகள், உண்மை, அமைதி, அறவழி, நேர்மை இதுதான் காந்தியடிகளின் தாரக மந்திரம். ஒரு தேசத்தின் முதுகெலும்பு கிராமம் என்றார். வாழ்நாள் முழுவதும் தனது கழிவறையினை தானே சுத்தம் செய்தார். தனது உடைகளை தானே துவைத்தார். பாரதத்தை தூய்மையாக்க, பல்வேறு விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். நாம் பயன்படுத்திய குப்பைகளை கண்ட இடங்களில் போடக் கூடாது. கை கழுவுதல் பழக்கத்தினை கடைபிடிக்க வேண்டும். திறந்த வெளியில் மலம் கழிப்பதால் சுகாதாரக் கேடு என்பதை விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். முடிந்த வரை கதர் ஆடைகளை அணிய வேண்டும். திருநெல்வேலி மாநகராட்சி திறந்தவெளி கழிப்பிடமில்லா மாநகராட்சிக்கான விருதினை பெற்றுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தினை விரைவில் திறந்தவெளி கழிப்பிடமில்லா மாவட்டமாக மாற்றிட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். தூய்மையே சுகாதாரத்திற்கான வழி என்பதை அனைவரும் அறிந்து சுகாதாரத்தினை மேம்படுத்திட வேண்டும் என தெரிவித்தார்.

விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது–

இன்று மகாத்மா காந்தியின் பிறந்த நாளில் சச்சிதா சேவா நிகழ்ச்சி கொண்டாடப்படுகிறது. தூய்மையே சேவைக்கான பணிகள் நமது மாவட்டத்தில் 15 நாட்களுக்கு முன்பு துவங்கப்பட்டது. தாமிரபரணி ஆற்றினை தூய்மைப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தினை 100 சதவீதம் திறந்தவெளி கழிப்பிடம் இல்லா மாவட்டமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பு சுமார் ஒரு இலட்சம் கழிப்பறைகள் கட்டுவதை நோக்கமாக கொண்டு சுகாதார இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக அண்ணாச்சீ யூஸ்த டாய்லெட் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டது. இதுவரை சுமார் 40 ஆயிரம் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளது. தூய்மை சேவை வாரம் துவங்கப்பட்ட பின்பு 10 ஆயிரம் தனிநபர் இல்ல கழிப்பறைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. இம்மாத இறுதிக்குள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அனைத்து இல்லங்களில் தனிநபர் இல்ல கழிப்பறைகள் கட்டும் பணிகள் முடிக்கப்படும். அரசுடன் இணைந்து தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், செஞ்சிலுவைச் சங்கங்கள் ஆகியோர் ஒவ்வொரு கிராமங்களை தத்தெடுத்து திறந்தவெளி கழிப்பிடம் இல்லா மாவட்டமாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். பாபநாசம் முதல் திருநெல்வேலி மாவட்டம் எல்கை முடியும் இடம் வரை 60 கி.மீ. தூரத்திற்கு தாமிரபரணி ஆற்றினை சுத்தம் செய்யும் பணிகள் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தாமிரபரணி மீட்பு குழுவினர், அரசு ஊழியர்கள் சங்கங்கள், ஓய்வூதியதாரர்கள் சங்கங்கள், செஞ்சிலுவைச் சங்கங்கள், பொதுமக்கள் ஆகியோர் தாமிரபரணி ஆற்றினை சுத்தம் செய்யும் பணிகளில் தங்களை ஈடுபடுத்தி கொண்டது பாராட்டுக்குரியது.

மேலும், அண்ணா பல்கலைக்கழகம் இப்பணிகளில் தங்களை ஈடுபடுத்தி கொண்டது பாராட்டுக்குரியது. தூய்மை பாரத திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் சுற்றுலாத்தலங்கள், ஆலயங்கள், நீர் நிலைகள் ஆகியவற்றினை சுத்தம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட துப்புரவு பணியாளர்கள் இப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர். தொடர்ந்து தூய்மை பணிகள் மேற்கொள்ளப்படும். தூய்மை பணிகளில் ஈடுபட்ட அனைவருக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். திருநெல்வேலி மாவட்டம் தூய்மையான மாவட்டமாக மாற்றுவதற்கும், 100 சதவீதம் திறந்தவெளி கழிப்பிடம் இல்லா மாவட்டமாக மாற்றுவதற்கும் அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்கிடுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

இவ்விழாவில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஆர்.முருகையாபாண்டியன், திரு.செல்வமோகன்தாஸ்பாண்டியன், திரு.மனோகரன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம்பகவத்,இ.ஆ.ப., திருநெல்வேலி கோட்டாட்சியர் திரு.மைதிலி, மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் திருமதி.ஹெட்சி லீனா, அண்ணா பல்லைகக்கழக முதல்வர் திரு.சக்திநாதன், தமிழ்நாடு கூட்டுறவு இணைய துணைத் தலைவர் திரு.தச்சை என்.கணேச ராஜா, ஆவின் தலைவர் திரு.ரமேஷ், திருநெல்வேலி கூட்டுறவு ஒன்றிய மாவட்ட தலைவர் திரு.சண்முகசுந்தரம், திருநெல்வேலி பேரங்காடி தலைவர் திரு.பல்லிக்கோட்டை செல்லத்துரை, திருநெல்வேலி–தூத்துக்குடி நெசவாளர் சங்க தலைவர் திரு.ஆறுமுகம், திருநெல்வேலி கூட்டுறவு அச்சக சங்க தலைவர் திரு.செவல் எஸ்.முத்துசாமி, முக்கிய பிரமுகர்கள் திரு.சுதா கே.பரமசிவம், திரு.பரணி சங்கரலிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.சுப்பையாபாண்டியன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.